# கேட்டை நக்ஷத்ரம் (ஆத்ம லிங்கம்)



**<u>1. கணபதி வழிபாடு</u>**

பரசிவம், சின்மயம், பூரணம்,

2சிவபோகபாக்யம் பரமநிதியம்

**<u>2. திருவருட்பாவில் சிவ கேட்டை சக்தி</u>**

பரோட்சஞானா தீதம், அபரோட்ச

ஞானானுபவம், விலாசப் பிரகாசம்

**<u>3. திருப்பாவைபாசுரம் – 10 கேட்டை இயல்பு</u>**

நோற்றச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்

மாற்றமும் தாராரோ? வாசல் திறவாதார்

நாற்றத் துழாய்முடி நாரா யணன் நம்மால்

போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்

கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கர்ணனும்

தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?

ஆற்ற அனந்த லுடையாய் அருங்கலமே

தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய்.

**Video Link : https://youtu.be/SQCE0pyXtnA**

**<u>விளக்கம் :</u>**

பத்தாயிரத்தில் ஒருவர் பாடல் பாடுவார்கள், லட்சத்தில் ஒருவர் சேவை செய்வார்கள், கோடியில் ஒருவர் ஞானதவம் மேற்கொள்வார்கள். இந்த ஞானவான்கள் கேட்டை நட்சத்திரக்காரர்கள். பார்த்த மாத்திரத்தில் நல்லவர்களையும், கெட்டவர்களையும் பாகுபடுத்தி உடனடியாக கண்டுபிடித்து ஒரே நாளில் பார்வையில் அனுபவித்து பொறுப்புகளை

தெய்வமாக்குவார்கள். எனவே இந்த கேட்டை கோட்டை கட்டி ஆளும். இதை தான் பாசுரத்தில் நோற்றச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய் அடிக்கோடிட்டு காட்டப்பட்டுள்ளது. இவர்கள் சொல்லும் அனைத்து வார்த்தைகளும் தேற்றமாகும். ஆற்ற அனந்தலுடைய இந்த வார்த்தையே நிர்வாகமாகும். எடுப்பிலே எளிதாக இருந்தாலும் கூற்றத்தின் வாய் விழுந்தாலும் கேட்டை நிர்வாகத்தில் ஏற்றமாய் மட்டுமே ஜெயித்துக்காட்டுவர். நாராயணின் விலாச பிரகாசமான ஆசி இந்த கேட்டை (ஜேஷ்டா) நக்ஷத்ரக்காரர்களும் புண்ணியமாய் அமையும். பொறுப்புகள் வந்து சேரும். பதவிகள் பலவும் வாய்க்கும். யுகம் புகழும், யுவஶ்ரீ யாக யுவ ராணியாக அதிசயங்களையும், அற்புதங்களையும் நிகழ்த்திக் காட்டுவர்.

கூத்திலே கட்டும் ஒருநாள் ராஜாவாக அல்ல, ஞான அனுபவ இராஜாவாக மக்களுக்கு பயன்படுவர்.

தேற்றமாய் வந்து திறவேலோர் என்பதே கேட்டையாகும். தேற்றமென்கிற கருத்து ஒற்றுமைகளை தனக்கே உரிய வகையில் செயல்படுத்தும் செயலாளர்களே கேட்டையினர் ஆவார். அளப்பறிய ஆற்றலுடைய அருங்கலம் செய்யும் செயல்கள் பார்ப்பதற்கு எளிமையாக இருந்தாலும், வலிமையான விளைவுகளை தரும். இவர்கள் தோற்றாலும் முக்தி கிடைக்கும்.

எனவே தான் தோற்றும் உனக்கே பெருந்துயில் என்பது பேரின்ப வீட்டைக்குறிக்கும் மந்திர வரிகளாகும். இந்த வகையிலே கும்பகர்ணனுக்கு அண்ணன் ராவணன் செய்யும் நல்லவைகளும் தெரியும், அல்லவைகளும் புரியும். ஆனாலும் அனுபவ விலாச பிரகாசத்தை வெளிக்காட்டவே போரிட்டு பேரின்ப வீட்டை அடைகிறான்.

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற சக்தி கேட்டைக்கு மட்டுமே உண்டு. எடுத்த நிலைப்பாட்டில் உறுதியாய் நின்று மாற்றம் காணாமல் நாற்ற துழாய் முடி நாராயணனை கேட்டையினர் கோட்டைக்கு வரவழைப்பார். துளசி மாலை அணிந்த நாராயணன் போற்ற பறை தந்து புண்ணியத்தை சேர்ப்பிக்கிறான். எனவே, அதீத ஞானமும், ஞான அனுபவமும் சொல்லாலும், செயலாலும், உடலாலும், பொருளாலும், உயிராலும், உணர்வாலும் ஒருங்கே மக்களுக்கு பயன்பட்டு மோட்சம் தர வழி வகைகளை கேட்டையினர் கூறுவார்கள். திறந்து காட்டுவார்கள் தெய்வ தரிசனத்தை (துளசி மாலை அணிந்த நாராயணன்). கேட்டையே வருக! கேட்டையே அருள்க!

## 4. வேதத்தில் கேட்டை ஜோதிசக்தி

ஓம் பூர் புவ ஸ்வஹ **(மெட்டு)**

ஜயேஷ்டாயை வித்மஹே
மகாந ஜயேஷ்ட்யாயை தீமஹி
இந்த்ர தந்த்ர தீமஹி
தன்னோ ஜயேஷ்டா ப்ரசோதயாத்

நெடிய நோக்கமும் நீ கொள்வாய்
நேர்படுவோரை விரட்டிடுவாய்
நெடியவர் யாரும் உனைத் தீண்டார்
கொடுப்பவன் நீயே நமோ நமோ

யோக்கியம் உனக்கு ப்ரதானம்
பாக்கியம் சிறப்பு ப்ரவாகம்
நோக்கம் நிறைவுற உழைப்பவன் நீ
யார்க்கும் குறைவிலை நமோ நமோ

ஓம் சிவாய மே நம சிவாய மே
த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்

## 5. கேட்டை கவிதை

மரா, மரா எனநீ சொன்னாலும் அது மா மந்திரமே
வரா, வரா எனநீ கேட்டாலும் அது வரு தந்திரமே
நரா, நரா எனநீ நினைத்தாலும் அது சுர சந்திரனே
தரா, தரா எனநீ கொடுத்தாலும் அது சூர சூரியனே

அதீத ஞானம் அதுவே பிரதானம் உனது நிதானம்
அனுபவ ஞானம் அதுவே சுயதானம் உனது விலாசம்
அபரோட்சமும் பரோட்சமும் நீ இட்டதே ஜேஷ்டம்
அகம் ஞானம் அகம்பாவம் ஆபத்தில்லாத சுபாவம்

கேட்டை கேட்காமலே சுட்டெரிக்கும் கோட்டை
சேட்டை செய்யாமலே சொல்லும் பேட்டை
பாட்டை பாடாமலே பாடவைக்கும் பாட்டை
மாட்டை நோகாமலே நிர்வகிக்கும் வீட்டை

கண்ணதாசனோ? காளிதாசனோ? நாராயணின் வண்ணன்
அண்ணதாதனும், அன்னதாதனும் அய்யனின் அப்பன்
முன்னவனும் நீயே, முனைவரும் நீயே, முனைப்பே, முளைப்பே
நீர்வேண்டா தேனே; ஆன்மீகம் வேண்டா அறிவே

சமரசம் தேங்கா சன் மார்க்கமே உன்மார்க்கம்
சாகசம் தேங்கா சக மார்க்கமே உன் தாக்கம்
சடசட சரசங்கள் சுய அதிகாரமே உன் வர்க்கம்
சலசல சத்தங்கள் எது வரினும் நாஉன் ஆக்கம்

கோடு ஒன்று போட்டவன் அண்ணனைத் தேடி
கோடு இரண்டு போட்டவன் வண்ணனைத் தேடி
கோடு மூன்று போட்டவன் தன்னையே தேடி
கோடு நான்கு போட்ட நீ தேடுவது என்ன?

## 6. அபிராமி அந்தாதியில் கேட்டை சக்தி

**ஆண்மகப்பேறு அடைய**

ககனமும், வானமும், புவனமும் காணவிற் காமன் அங்கம்

தகனமும் செய்த தவப்பெருமாற்குத் தடக்கையும் செம்

முகனும் முந்நான்கு இருமூன்றெனத் தோன்றிய மூதறிவின்

மகனும் உண்டாயது அன்றோ? வல்லி நீ செய்த வல்லபமே!

**கவிஞராக**

வல்லபம் ஒன்றறியேன்; சிறியேன் நின் மலரடிச்செம்

பல்லவம் அல்லது பற்று ஒன்றிலேன் பசும் பொற்பொருப்பு

வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய்; வினையேன்தொடுத்த

சொல் அவமாயினும் நின்திருநாமங்கள் தோத்திரமே.

**பகைவர்கள் அழிய**

தோத்திரம் செய்து, தொழுது, மின்போலும் நின் தொற்றம்ஒரு

மாத்திரைப் போதும் மனதில் வையாதவர் வண்மை, குலம்

கோத்திரம், கல்வி, குணம், குன்றி நாளும் குடில்கள்தொறும்

பாத்திரம் கொண்டு பலிக்கு உழலாநிற்பர் பாரெங்குமே.

**நிலம் வீடு போன்ற செல்வங்கள் பெருக**

பாரும், புனலும், கனலும், வெங்காலும், படர்விசும்பும்,

ஊரும் முருகு சுவைஒளி ஊறொலி ஒன்றுபடச்

சேரும் தலைவி, சிவகாமசுந்தரி சீரடிக்கே

சாரும் தவமுடையார் படையாத தனம் இல்லையே.

**Video Link : https://youtu.be/iVb8ulEiZMg**

## 7. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் கேட்டை சக்தி ஓம்... ஓம்... ஓம்...

| | |
|---|---|
| ஓம் அப்ராதிரதாய நம | – மிரட்டல்கள் எழாத மன்னவனே போற்றி |
| ஓம் ப்ரத்யும்நாய நம | – சொத்துகளின் மொத்தமே போற்றி |
| ஓம் அமிதவிக்ரமாய நம | – அளவிட முடியாத இலக்கணங்களே போற்றி |
| ஓம் காலநேமிநிக்நே நம | – காலநேமி அசுரனை வென்றவனே போற்றி |
| ஓம் வீராய நம | – தைரியமான வீரனே போற்றி |
| ஓம் ஸெளராயே நம | – கௌரவ சூரனே போற்றி |
| ஓம் ஸுரஜநேஸ்வராய நம | – கோட்டை கட்டியாளும் இந்திரனே போற்றி |
| ஓம் த்ரிலோகாத்மநே நம | – மூவுலகும் உணர்ந்த ஆத்மாவே போற்றி |
| ஓம் த்ரிலோகேஸாய நம | – திரிலோக நிர்வாகியே போற்றி |
| ஓம் கேஸவாய நம | – சிறப்பு சூரிய கிரணங்களே போற்றி |
| ஓம் கேஸிக்நே நம | – கேசியை கொன்றவனே போற்றி |
| ஓம் ஹரயே நம | – சம்சார சாஹரத்தை கடந்தவனே போற்றி |
| ஓம் காமதேவாய நம | – தர்ம, கர்ம, காம, மோட்சம் கண்டவனே போற்றி |
| ஓம் காமபாலாய நம | – வையத்து வாழ்வாங்கு நாயகனே போற்றி |
| ஓம் காமிநே நம | – ஆசைகளை நிறைவேற்றி தருபவனே போற்றி |
| ஓம் காந்தாய நம | – பிரம்மனுக்கு கூட்டி தந்த கொடையே போற்றி |
| ஓம் க்ருதாகமாய நம | – ஆகமங்களின் இசையே, இயலே போற்றி |
| ஓம் அநிர்தேஸ்யவபுக்ஷ நம | – எண்ணத்தில் அடங்காத குணங்களே போற்றி |
| ஓம் விஷ்ணவே நம | – எங்கும் நிறைந்த பரம்பொருளே போற்றி |
| ஓம் வீராய நம | – இயக்கத்தின் பரம்பொருளே போற்றி |
| ஓம் அநந்தாய நம | – எல்லையில்லா சுதந்திரமே போற்றி |
| ஓம் தநஞ்ஜாயாய நம | – தனஞ்ஜெய அநுபூதியே போற்றி |
| ஓம் ப்ரஹ்மண்யாய நம | – வேதம் படித்த பிராமணனே போற்றி |
| ஓம் ப்ரஹ்மக்ருதே நம | – மெத்தப்படித்த தவமே போற்றி |
| ஓம் ப்ராஹ்மணே நம | – ஆக்ஸிஜன் ஆற்றலே போற்றி |
| ஓம் ப்ராஹ்மணே நம | – தவங்களில் கலை கரகமே போற்றி |
| ஓம் ப்ரஹ்மவிவர்த்தநாய நம | – பிரம்ம வித்தையான தவமே போற்றி |
| ஓம் ப்ரஹ்மவிதே நம | – பறை சாற்றும் தவ சிற்பியே போற்றி |
| ஓம் ப்ராஹ்மணாய நம | – மகா மௌனி உள் கடவே போற்றி |
| ஓம் ப்ரஹ்மிணே நம | – உள்கட, உள்கட பிராணனே போற்றி |
| ஓம் ப்ரஹ்மஜ்ஞாய நம | – நடை, உடை பாவனையே போற்றி |

ஓம் ப்ராஹ்மணப்ரியா நம – முன்மாதிரியான பிரிய பிராம்மணீயமே போற்றி

ஓம் மஹாக்ரமாய நம – ராம நாம விலாசமே போற்றி

ஓம் மஹாகர்மணே நம – உலகை காக்கும் செயலே போற்றி

ஓம் மஹாதேஜஸே நம – பரிணாம வளர்ச்சி ஒளியே போற்றி

ஓம் மஹாரகாய நம – நாக சத்தியே போற்றி

ஓம் மஹாக்ரத்வே நம – தியாக பிரம்மமே போற்றி

ஓம் மஹாயஜ்வநே நம – இம்மை உலக புகழே போற்றி

ஓம் மஹாயஜ்ஞாய நம – யாகத்தின் தியாகமே போற்றி

ஓம் மஹாஹவிக்ஷ நம – அவிர்பாக முத்திரையே போற்றி

ஓம் ஸ்தவ்யாய நம – அனைவரும் ஏற்றும் ஏற்றமே போற்றி

ஓம் ஸ்தவப்ரியாய நம – பஜனை பிரிய அனுமனே போற்றி

ஓம் ஸ்தோத்ராய நம – ராம நாம மகிமையே போற்றி

ஓம் ஸ்துதயே நம – முகஸ்துதியின் முகத்துவமே போற்றி

ஓம் ஸ்தோத்ரே நம – ராமநாம முழக்கமே போற்றி

ஓம் ரணப்ரியாய நம – சங்கு, சக்கர, கதா, கோதண்ட சாரங்க வாழ்வியலே போற்றி

## 8. லலிதா ஸஹஸ்ரநாமத்தில் கேட்டை சக்தி

ரக்தவர்ணாமாமம்ஸநிஷ்டாகுடான்ன ப்ரீதமானஸா
ஸமஸ்தபக்த ஸுகதாலாகின்யபா ஸ்வரூபிணீ

ஸ்வாதிஷ்டாநாம்புஜகதாசதுர்வக்த்ரமநோஹரா
சூலாத்யாயுத ஸம்பந்தாபீதவர்ணா திகர்விதா

மேதோநிஷ்டாமதுப்ரீதாபந்தின்யாதி ஸமன்விதா
தத்யந்தாஸக்தஹ்ருதயாகாகினீரூப தாரிணீ

மூலாதாரம்புஜாரூடாபஞ்சவக்த்ராஸ்தி ஸம்ஸ்திதா
அங்குசாதி ப்ரஹரணாவரதாதி நிஷேவிதா

முத்கௌதநாஸக்த சித்தா ஸாகின்யமபா ஸ்வரூபிணீ
ஆஜ்ஞாசக்ராப்ஜ நிலயாசுக்லவர்ணா ஷடாநநா

மஜ்ஜா ஸம்ஸ்தா ஹம்ஸவதீ முக்யசக்தி ஸமன்விதா
ஹரித்ரான்னைக ரஸிகா ஹாகிநீ ரூப தாரிணீ

**Video Link : https://youtu.be/DtSBLpQStT4**

## 9. கந்தகுரு கவசகத்தில் கேட்டை சக்தி

ஏழையைக் காத்திடப்பா ஏத்துகிறேன் உன்நாமம்

உன்னையன்றி வேறொன்றை ஒருபோதும் நம்புகிலேன்

கண்கண்ட தெய்வமே கலியுக வரதனே

கந்தனென்ற பேர்சொன்னால் கடிதாக நோய்தீரும்

புவனேச்வரி மைந்தா போற்றினேன் திருவடியை

திருவடியை நம்பினேன் திருவடி சாக்ஷியாக

புவனமாதா மைந்தனே புண்ணிய மூர்த்தியே கேள்

நின்நாமம் ஏத்துவதே நான்செய்யும் தவமாகும்

நாத்தழும் பேறவே ஏத்திடுவேன் நின்நாமம்

முருகா முருகா வென்றேமூச் செல்லாம் விட்டிடுவேன்

உள்ளும் புறமும் ஒருமுருகனையே காண்பேன்

அங்கிங் கெனாதபடி எங்குமே முருகனப்பா

முருகன் இலாவிட்டால் முவ்வுலக மேதப்பா

அப்பப்பா முருகாநின் அருளே உலகமப்பா

அருளெலாம் முருகன் அன்பெலாம் முருகன்

ஸ்தாவர ஜங்கமமாய் ஸ்கந்தனாய் அருவுருவாய்

முருகனாய் முதல்வனாய் ஆனவன் ஸ்கந்தகுரு

ஸ்கந்தாச்ரம மிருக்கும் ஸ்கந்தகுரு அடிபற்றிச்

சரணம் அடைந்தவர்கள் ஸாயுஜ்யம் பெற்றிடுவர்

சத்தியம் சொல்கின்றேன் சந்தேக மில்லையப்பா

வேதங்கள் போற்றிடும் வடிவேலன் முருகனை நீ

சந்தேஹ மில்லாமல் சத்தியமாய் நம்பிடுவாய்

சத்தியமான தெய்வம் ஸ்கந்த குருநாதன்

சத்தியம் காணவே நீ சத்தியமாய் நம்பிடப்பா

**Video Link : https://youtu.be/fO7MD2St1iU**

**10. கந்தர் அநுபூதி கேட்டை சக்தி**

சிந்தாகுல இல்லொடு செல்வம் எனும்

விந்தாடவி என்று விடப் பெறுவேன்

மந்தாகினி தந்த வரோதயனே

கந்தா, முருகா, கருணாகரனே.(33)

சிங்கார மடந்தையர் தீநெறி போய்

மங்காமல் எனக்கு வரம் தருவாய்

சங்க்ராம சிகாவல, சண்முகனே

கங்காநதி பால, க்ருபாகரனே.(34)

**Video Link : https://youtu.be/x9sjGNdLHkw**

**11. ராகங்களில் கேட்டை சக்தி**

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| ஷாத்விதமர்கினி | சுபர்ணாங்கி | திவ்யா மணி | திவ்யா மணி |

**12. மூலமந்திரம்**

யானி கானிச பாபானி ஜன்மாந்த்ர

க்ருதானிச தானி தானி வினஸ்யந்தி

ப்ரதக்ஷிணபதேபதே

**13. விருட்ச சக்தி பெற நட வேண்டிய மரம்**

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| பலா | பூவரசு | அரசு | வேம்பு |

**14. பரிகாரம்**

- குறைந்தபட்சம் 7 நபர்களுக்கு உதவிடுக.
- உங்கள் வழிபாட்டிற்கு ஏற்றபடி மந்திரங்களை பாராயணம் செய்யவும்.

- கோவிலுக்கு சென்று சுவாமியை தரிசிக்கவும்.
- 2x2 கண்ணாடி வைத்து உங்கள் முகத்தை பார்த்து தியானம் செய்யவும். (ஆடி தியானம்).
- நட்சத்திர கோயில் **அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயில்,** பசுபதி கோயில் - தஞ்சாவூர்.


**Aathma Trust (ஆத்ம லிங்கம்)**

Regd No: 96/19

33.கோசாலை, கிரிவலம்,

திருவண்ணாமலை - 600 501.

**Website :** www.aathmanakshtra.org

www.yaasha.in

**Email :** jhohumm@gmail.com

**Youtube :** aathmanakshatra